

# உங்களுக்கு மின்சாரம் சம்மந்தப்பட்ட குறைகள் உள்ளதா ?

தீர்வு காண ஒரு நுகர்வோர் கையேடு

CAG
Citizen consumer and civic Action Group

NEW #246 (OLD #277B),TTK ROAD (J.J. ROAD), ALWARPET, CHENNAI 600018
044-24660387/24994458

An initiative supported by SHAKTI SUSTAINABLE ENERGY FOUNDATION

In association with CEEW THE COUNCIL

## குறிப்பு விவரப் பட்டியல்

(அ) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் - இணையதளம்
(www.tangedco.gov.in)

(ஆ) மின்சார சட்டம் 2003
(www.cercind.gov.in)

(இ) குறைதீர் மன்ற மற்றும் குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகள்
(www.tnerc.gov.in)

(ஈ) குறைதீர் மன்றம் - இணையதளம்
(http://tneb.tnebnet.org:8087/cgrfonline/)

# இந்தக் கையேட்டில்


**1**
குறைகளைத் தீர்ப்பதற்கான மூன்றடுக்கு வழிமுறைகள்

**2**
தொலைபேசி மற்றும் WHATSAPP செயலி மூலம் புகாரை பதிவு செய்தல்

**4**
பிரிவு அலுவலகத்தில் புகாரை பதிவு செய்தல்

**5**
நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் புகாரை பதிவு செய்தல்

**8**
மின்சார குறைதீர்ப்பாளரிடம் முறையீடு செய்தல்

**10**
பின்னிணைப்பு

# மின்சாரம் சம்மந்தப்பட்ட குறைகளுக்கு தீர்வு காண மூன்றடுக்கு வழிமுறை

## முதல் படி

**01**

தொலைபேசி மூலமாக அல்லது பிரிவு அலுவலகத்தில் உதவி பொறியாளரிடம் நேரில்/ தபால் மூலமாக உங்கள் புகாரை பதிவு செய்யலாம்.

**பிரிவு அலுவலகத்தில் தீர்வு காணாத நிலையில், என்ன செய்வது ?**

## இரண்டாவது படி

**02**

நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் (சி.ஜி.ஆர்.எஃப்/CGRF) நேரில் /ஆன்லைன் மூலமாக புகாரை பதிவு செய்யலாம்.

சி.ஜி.ஆர்.எஃப், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் (டி.என்.இ.ஆர்.சி) விதிமுறைகளின்படி வடிவமைக்கப்பட்டு மாநிலத்தின் ஒவ்வொரு மின்பகிர்மான வட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ளது.

**குறை தீர்க்கும் மன்றத்தின் தீர்ப்பில் திருப்தி அடையாத நிலையில், என்ன செய்வது ?**

## மூன்றாவது படி

**03**

மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் மாநில அளவில் நியமிக்கப்பட்ட குறைதீர்ப்பாளரிடம் முறையீடு செய்யலாம்.

## தொலைபேசி மூலம் புகாரை பதிவு செய்தல்

### மின் தடை புகார்

# 1912

24 x 7
உதவி எண்

நுகர்வோர்கள் மின் தடை தொடர்பான புகார்களை 1912 உதவி எண்ணில் தெரிவிக்கலாம். இந்த எண் அனைத்து நாட்களிலும் 24 மணி நேரமும் செயல்படும்.

## WhatsApp செயலி மூலம் புகாரை பதிவு செய்தல்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் Whatsapp மூலமாக செயல் படும் அழைப்பு மையங்களை அமைத்துள்ளது.

சேதமடைந்த/சாய்ந்த கம்பிகள், தொங்கும் / தொய்வடைந்த வயர்கள், செயல்படாத தெரு விளக்குகள் போன்ற குறைகளை பற்றி இந்த அழைப்பு மையத்தில் புகார் பதிவு செய்யலாம்.

# மாவட்ட வாரியான தொடர்பு எண்கள் (WhatsApp)

சேலம், ஈரோடு, நாமக்கல்

9445851912

திருச்சி, தஞ்சாவூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, திருவாரூர், நாகப்பட்டினம், கரூர்

9486111912

மதுரை, திண்டுக்கல், தேனி, இராமநாதபுரம், சிவகங்கை

9443111912

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர்

9444371912

விழுப்புரம், திருவண்ணாமலை, கடலூர்

9445855768

கோவை, திருப்பூர், நீலகிரி

9442111912

சென்னை

9445850829

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, விருதுநகர்

8903331912

வேலூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி

6380281341

புகாரின் தன்மை, இடம், முகவரி போன்ற விவரங்களை புகைப்படத்துடன் புகாரில் தெரிவிக்க வேண்டும்.....

# பிரிவு அலுவலகத்தில் புகாரை பதிவு செய்தல்

மின்சார இணைப்பு தொடர்பான குறைகளுக்கு உங்கள் பிரிவு அலுவலகத்தில் உள்ள உதவி பொறியாளரிடம் புகார் கடிதத்தை அளிக்கவும்.

## உதவி பொறியாளர்

புகார் கடிதத்தில் பெயர், மின் இணைப்பு எண், முகவரி போன்ற விவரங்களைக் குறிப்பிட்டு உங்கள் புகாரை விவரிக்கவும்

இல்லையெனில், சம்பந்தப்பட்ட உதவி செயற் பொறியாளர் அல்லது செயற் பொறியாளர் அல்லது மேற்பார்வை பொறியாளர் அல்லது முதன்மை பொறியாளரை அவர்களது பார்வையாளர் நேரத்தில் அணுகலாம்.

**பார்வையாளர் நேரம்**

அனைத்து வேலை நாட்களிலும் பிற்பகல் 2 மணி முதல் மாலை 3 மணி வரை

மேலும் நுகர்வோர்கள் தங்கள் குறைகளை, குறைதீர்ப்பு நாள் கூட்டங்களில் நிவர்த்தி செய்து கொள்ளலாம்....

ஒவ்வொரு மாதமும், சம்மந்தப்பட்ட மின்பகிர்மான வட்டத்திற்குட்பட்ட ஒவ்வொரு கோட்டத்திலும் குறைதீர்ப்பு நாள் கூட்டங்கள் மேற்பார்வை பொறியாளரால் நடத்தப்படும். குறைதீர்ப்பு நாள் கூட்டங்கள் நடைபெறும் தேதிகள் பிரிவு/கோட்ட அலுவலகங்களில் அறிவிப்பு பலகை மூலம் தெரிவிக்கப்படும். மேலும் குறைதீர்ப்பு நாள் குறித்த தகவல்கள் செய்தித்தாள்களிலும் வெளியிடப்படும்.

**குறைதீர்ப்பு நாள் கூட்டங்கள்**



# நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் புகாரை பதிவு செய்தல்



## நுகர்வோர் குறைதீர் மன்றம்

(சி.ஜி.ஆர்.எஃப்/CGRF)

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வகுத்துள்ள ஒழுங்குமுறை விதிகளின் படி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் ஒவ்வொரு மின்பகிர்மான வட்டத்திலும் நுகர்வோரின் குறை தீர்ப்பதற்காக குறைதீர் மன்றங்கள் அமைத்துள்ளது.

இந்த மன்றம் கீழே குறிப்பிட்டுள்ள மூன்று அங்கத்தினர்களைக் கொண்டிருக்கும்:

- மன்றத்தலைவர், மேற்பார்வை பொறியாளர் தர நிலைக்கு குறையாமல், உரிமம் பெற்றவரின் முழு நேர அலுவலராக இருப்பார்.
- ஒரு உறுப்பினர், நிதி/சட்டம் சார்ந்த தொழிலில் 15 - 20 ஆண்டுகள் அனுபவம் பெற்ற ஒருவராக இருப்பார்.
- மற்றைய உறுப்பினர், பதிவு செய்யப்பட்ட ஒரு அரசு சாரா கூட்டமைப்பிலிருந்தோ அல்லது ஒரு நுகர்வோர் அமைப்பிலிருந்தோ அல்லது முனைந்து செயல்படும் ஒரு நுகர்வோராகவோ இருப்பார்.

### வழிமுறை 1: இணையத்தில் பதிவு செய்தல்

நுகர்வோர்கள் தங்கள் குறைகளை, குறைதீர் மன்றத்தின் இணையப்பக்கத்தில்* "Petition Entry" எனும் மெனுவை click செய்து பதிவு செய்யலாம். புகார் பதிவு செய்து முடித்தவுடன் ஒப்புதல் சீட்டை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

புகார் ஏற்றுக்கொள்ளப்பட்டதா அல்லது நிராகரிக்கப்பட்டதா போன்ற தகவல்களை "Petition Status" எனும் மெனுவை click செய்து தெரிந்து கொள்ளலாம்.

* http://tneb.tnebnet.org:8087/cgrfonline/

# நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் புகாரை பதிவு செய்தல்

நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் இணையப்பக்கத்தில்...


.tnebnet.org:8087/cgrfonline/petitionentry.xhtml

Tamilnadu Generation and Distribution Corporation Limited

Home | Petition Entry | Petition Status | Latest Orders | Contact Us

Consumer Grievance Redressal Forum

CGRF Petition Entry

Name: *

Communication Address: *

Mobile Number: *

Email Address: *

Circle : * Select One

Category of complaint : * Select One

LICENSEE'S EMPLOYEE AGAINST WHOM COMPLAINT IS MADE

Respondent's Name: *

Respondent's Desgination* AE AEE EE

Respondent's-Office Address:

Note: Please specify the area/locality in 'Description of complaint' for speedy disposal of the complaint

Description of Complaint:*

Attachment : Size limit is 3 MB

Submit the Complaint

PETITION ENTRY மெனு


Home | Petition Entry | Petition Status | Latest Orders | Contact Us

Consumer Grievance Redressal Forum

View Online Petition Status

Petition ID: * View Status

PETITION STATUS மெனு

# நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் புகாரை பதிவு செய்தல

## நுகர்வோர் குறைதீர் மன்றம்

(சி.ஜி.ஆர்.எஃப்/CGRF)

### வழிமுறை 2: நேரடியாக பதிவு செய்தல்

நுகர்வோர்கள் தங்கள் குறைகளை, குறைதீர் மன்றத்தலைவரிடம் பின்னிணைப்பு-1 ல் கொடுக்கப்பட்டுள்ள வடிவத்தில் சமர்ப்பிக்கலாம். சமர்ப்பிக்க வேண்டிய முகவரிகள் மின் பகிர்மான வட்ட வாரியாக பின்னிணைப்பு-2 ல் வழங்கப்பட்டுள்ளது.

புகார் பதிவு செய்யப்பட்டதற்கான ஒப்புதல், பதிவு செய்யப்பட்டதிலிருந்து 7 வேலைநாட்களுக்குள் நுகர்வோருக்கு அனுப்பப்படும். புகார் நிராகரிக்கப்படும் பட்சத்தில் நுகர்வோருக்கு தகவல் தெரிவிக்கப்படும்.

1. புகாரின் விசாரணையின் போது, நுகர்வோர் தாமாக ஆஜர் ஆகலாம். முடியாதபட்சத்தில், அவர் முன் மொழியும் நபர், அவர் சார்பாக ஆஜர் ஆகலாம்.

2. புகாரின் நிறைகள் / குறைகள் பற்றிய ஆணை, புகார் பதிவு செய்யப்பட்டதிலிருந்து 50 நாட்களுக்குள் வெளியிடப்படும்.

3. புகார் தொடர்பான குறைதீர் மன்றத்தின் செயல்பாடுகள் மற்றும் தீர்ப்புகள் நுகர்வோருக்கும், உரிமதாரருக்கும் தெரிவிக்கப்படும்.

4. குறைதீர் மன்றத்தின் தீர்ப்புகளில் திருப்தி அடையாத நுகர்வோர்கள், தீர்ப்பு வழங்கப்பட்டதிலிருந்து 30 நாட்களுக்குள் மின்சார குறைதீர்ப்பாளரிடம் மேல் முறையீடு செய்யலாம்.

# மின்சார குறைதீர்ப்பாளரிடம் முறையீடு செய்தல்

## மின்சார குறைதீர்ப்பாளர்

மாநில அளவில் மின்சார ஒழுங்குமுறை ஆணையம், ஒழுங்குமுறை விதிகளின்படி ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களை, மின்சார குறைதீர்ப்பாளர் என பணியமர்த்தும்/ நியமிக்கும்.

ஆணையத்தால் குறிப்பிட்டுள்ள படி மின்சார குறைதீர்ப்பாளரின் அலுவலகம் கீழ்க்கண்ட முகவரியில் அமைந்துள்ளது:

**மின்சார குறைதீர்ப்பாளர் (Electricity Ombudsman)**
**No 19A, Rukmini Lakshmipathy Salai, Egmore,**
**Chennai - 600 008.**
**☎ 044-28411376/78/79**

## புகாரை பதிவு செய்வதற்கான வழிமுறை

குறைதீர் மன்றத்தின் தீர்ப்பில் அதிருப்தி அடைந்த அல்லது அந்த மன்றத்தில் குறை தீர்க்கப்படாததால் அதிருப்தி அடைந்த எந்த நுகர்வோரும், தானாகவோ அல்லது அவர் முன் மொழியும் நபர் மூலமாகவோ, மின்சார குறைதீர்ப்பாளரிடம் மேலே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் பின்னிணைப்பு-3 ல் கொடுக்கப்பட்டுள்ள வடிவத்தில் முறையீடு செய்யலாம்.

# மின்சார குறைதீர்ப்பாளரிடம் முறையீடு செய்தல்

## முறையீட்டாளர் பின்பற்ற வேண்டியவை

1. முறையீட்டாளர், மின்சார குறைதீர்ப்பாளருக்கு முறையீடு செய்வதற்கு முன், முறையீட்டில் குறிப்பிட்ட உரிமதாரர் குறைகளை மன்றத்தில் எழுத்து மூலம் முறையீடு செய்திருந்து அந்த முறையீட்டை மன்றம் தள்ளுபடி செய்திருக்க வேண்டும் அல்லது முறையீடு பதிவு செய்த 50 நாட்களுக்குள் பதில் பெறப்படாமல் இருந்திருக்க வேண்டும் அல்லது முறையீட்டாளருக்கு மன்றம் அளித்த பதிலில் திருப்தி ஏற்படாமல் இருந்திருக்க வேண்டும்.

2. முறையீடு, முறையீட்டிற்கான நிகழ்வு நடந்த மூன்று மாதங்களுக்குள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

3. பெறப்படும் முறையீடு தீர்க்கப்படாத ஒன்றாக இருத்தல் வேண்டும். மின்சார குறைதீர்ப்பாளரால் முந்திய விசாரணை நடவடிக்கைகள் மூலமாக தீர்க்கப்பட்ட பொருள் (SUBJECT MATTER) கொண்ட முறையீடு, அதே முறையீட்டாளரிடமிருந்து தனியாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறையீட்டாளர்களுடன் சேர்ந்தோ அல்லது எத்தரப்பினரிடமிருந்து வந்தாலும், ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. முறையீட்டின் குறிப்பிட்ட புகார் ஏதாவது நீதி மன்ற நடவடிக்கையில் நிலுவையில் இருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதி மன்றம் ஏற்கனவே கட்டளையோ, தீர்ப்போ அல்லது இறுதியாணையோ வழங்கியிருந்தாலோ, அவ்வாறான முறையீடு ஏற்றுக்கொள்ளப்படாது.

5. முறையீடு அற்பமானதாகவும் எரிச்சல் தரக்கூடியதாகவும் இருக்கக் கூடாது.

மேலே குறிப்பிட்டவற்றை பின்பற்றினாலொழிய எந்த முறையீடும், மின்சார குறைதீர்ப்பாளரால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது

# பின்னிணைப்புகள்


**10**

பின்னிணைப்பு I
நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் புகாரை பதிவு செய்ய புகார் படிவம்

**12**

பின்னிணைப்பு II
நுகர்வோர் குறைதீர் மன்றங்களின் முகவரிகள்

**15**

பின்னிணைப்பு III
குறைதீர்ப்பாளரிடம் முறையீடு செய்ய புகார் படிவம்

## பின்னிணைப்பு I

**மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்**

வடிவமைக்கப்பட்ட புகார் படிவம்

(தேவைப்படும் சேவையினை பொருத்தமான சதுரத்தில் √ குறிப்பிடவும்) நாள் ☐

1) மின்னிணைப்பு சார்ந்தது

i) புதிய மின்னிணைப்பு: விண்ணப்பத்தின் தேதி ☐

குறைந்த மின் அழுத்தம் ☐ உயர் மின் அழுத்தம் ☐

வீடு ☐ வணிகம் ☐ தொழிற்சாலை ☐

விவசாயம் ☐ இதர இனங்கள் ☐

ii) தற்போதுள்ள மின் இணைப்பு – இணைப்பு எண் ☐

மின் இணைப்பு வயர் / கேபிள் மாற்றுவது ☐ பழுதான மீட்டர் ☐ மீட்டர் திறன் அதிகரித்தல் ☐

கூடுதல் மின் பளு ☐ மின் இணைப்பு மும்முனை மாற்றம் ☐ மின் இணைப்பு இடமாற்றம் ☐

பெயர் மாற்றம் ☐ மின்கட்டணம் சீர் செய்தல் ☐ பட்டியலிடலில் சிக்கல் ☐

மின் இணைப்பு குறைபாடுகள் ☐ இதர புகார்கள் ☐

மனு கொடுத்த தேதி ☐

தொகை கொடுக்கப்பட்ட தேதி ☐

iii) வழங்கப்படும் மின்சாரத்தின் தரம்

குறைந்த மின் அழுத்தம் ☐ சீரற்ற மின் அழுத்தம் ☐ அடிக்கடி மின்தடை ஏற்படல் ☐

எந்த தேதியில் இருந்து ☐ எந்த தேதி வரை ☐ எந்த தேதியில் இருந்து ☐ எந்த தேதி வரை ☐

தற்போதுள்ள / திட்டமிடப்பட்டுள்ள மின் இணைப்பு உள்ள இடத்தின் விலாசம் (எல்லா புகார்தாரருக்கும் பொதுவாக)

☐

2) இதர புகார்கள்

i) முறையற்ற நடத்தை ☐

ii) தகவல் கொடுக்க மறுப்பு ☐

iii) வேண்டுமென்றே தாமதப்படுத்துதல்

விண்ணப்பம் பதிவு செய்தல் ☐ பணம் செலுத்துவதை ஏற்றல் ☐

மின்னளவி பொருத்துதல் ☐ மின் இணைப்பு கொடுத்தல் ☐

iv) கையூட்டு கேட்பது / பெறுவது

நேரம் ☐ தேதி ☐ இடம் ☐

உரிமம் பெற்றவரின் எந்த பணியாளருக்கு எதிராக புகார் அளிக்கப்பட்டுள்ளதோ அதன் விவரம்
(ஒரு நபருக்கு மேலிருந்தால் தனியாக புகார் படிவம் சேர்க்கவும்)

பெயர்

பதவி

அலுவலக முகவரி

புகாரின் விரிவான விளக்கம்
(அனைத்து புகார்களுக்கும் பொதுவானது)

(தேவையிருப்பின் தனித் தாள் சேர்த்துக்கொள்ளவும்)

3) மனுதாரர் பற்றிய விவரம்

பெயர் மற்றும் முகவரி

தொலைபேசி எண்

மின் அஞ்சல் முகவரி

**மனுதாரரின் கையொப்பம்**

குறிப்பு: 1) தேவைப்படின் தகவல் கொடுப்பதற்கு தனித்தாள் இணைக்கவும்
2) இந்த புகார் கொடுத்ததால் புகார் கொடுத்தவருக்கு எந்த தொல்லையும் ஏற்படாது என்று உறுதி அளிக்கப்படுகிறது.
3) புகார் மீது நடவடிக்கை எடுக்க புகார் கொடுப்பவரின் முழுமையான முகவரி அவசியம்.

---

<u>அலுவலக உபயோகத்திற்கு மட்டும்</u>

குறை எண்

புள்ளி விவர பதிவாளரின் பெயர்

பெற்ற தேதி

பிரிவு

**கையொப்பம்**

## பின்னிணைப்பு II

நுகர்வோர் குறைதீர் மன்றங்களின் முகவரிகள்




**Chennai EDC/ Central,**
TANGEDCO, MGR Salai,
110/33/11KV Valluvar
Kottam, Nungambakkam,
Chennai - 600034
044 –28224423
cgrfchnc@tnebnet.org

**Chennai EDC, North**
TANGEDCO
5A Block,144 Anna Salai,
Chennai - 600 002
044 – 28521833
cgrfchnn@tnebnet.org

**Cuddalore EDC,**
TANGEDCO, 13-A Nethaji
Road,
Cuddalore 607 001.
04142 – 223793
cgrfcud@tnebnet.org

**Thiruvannamalai EDC,**
TANGEDCO, Vengikkal Post,
Thiruvannamalai - 606 604.
04175 – 233122
cgrftvm@tnebnet.org

**Villupuram EDC,**
TANGEDCO, Old Power House
Road, Villupuram 605602.
04146 – 240371
cgrfvpm@tnebnet.org

**Kallakurichi EDC,**
TANGEDCO,Old Power House
Road, Villupuram 605602.
04146 – 240371
sekri@tnebnet.org

**Coimbatore EDC, Metro,**
TANGEDCO, Tatabad,
Coimbatore 641 012.
0422 – 2481415
cgrfcbem@tnebnet.org

**Coimbatore EDC, North**
TANGEDCO, Tatabad,
Coimbatore 641 012.
0422 – 2495133
cgrfcben@tnebnet.org

**Coimbatore EDC, South**
TANGEDCO, Tatabad,
Coimbatore 641 012.
0422 – 2493250
cgrfcbes@tnebnet.org

**Nilgiris EDC,**
TANGEDCO, Aavin Building,
Udagamandalam - 643 001.
0423 – 2444382
cgrfnilg@tnebnet.org

**Udumalpet EDC,**
TANGEDCO, Eripalayam,
Tiruppur Road,
Udumalpet 642126
04252 – 224304
cgrfudt@tnebnet.org

**Tiruppur EDC,**
TANGEDCO, 19-A, Jyothi
Nagar, Perumal Nallur Road,
Tiruppur-641 603.
0421 – 2470153
cgrfsetrpr@tnebnet.org

**Erode EDC,**
TANGEDCO, 948, E.V.N.
Road, Erode 638 009
0424 – 2217245
cgrfed@tnebnet.org

**Gobichettipalayam EDC,**
TANGEDCO, 132, Cutchery
Street, Gobi- 638 452
04285 – 223701
cgrfgobi@tnebnet.org

**Mettur EDC,**
TANGEDCO, 1Mettur Dam -
636 401, Salem District.
04298 – 244177
cgrfmtr@tnebnet.org

## பின்னிணைப்பு II

நுகர்வோர் குறைதீர் மன்றங்களின் முகவரிகள்

**Salem EDC**
TANGEDCO, KN Colony,
Udayapatti,
Salem - 636 014
0427 – 2241310
cgrfslm@tnebnet.org

**Namakkal EDC,**
TANGEDCO, Sri Krishna Complex, 32/1, Karuppanan Street, Paramathy Road,
Namakkal- 637 001
04286-233333
cgrfnmkl@tnebnet.org

**Dindigul EDC,**
Meenakshi Nayakkan Patty Post, Dindigul -
624 002.
0451 – 2460948
cgrfdgl@tnebnet.org

**Madurai EDC,**
TANGEDCO, K.Pudur,
Madurai 625 007.
0452 – 2537754
cgrfmdu@tnebnet.org

**Madurai EDC/Metro**
TANGEDCO, K.Pudur,
Madurai 625 007.
0452 – 2538159
cgrfmdua@tnebnet.org

**Ramanathapuram EDC,**
TANGEDCO,Rameswaram Road, Ramanad - 623 501.
04567 – 230577
cgrfrmd@tnebnet.org

**Sivagangai EDC,**
TANGEDCO,
Sivagangai – 623 562.
04575 – 241600
cgrfsiva@tnebnet.org

**Theni EDC,**
TANGEDCO,NRT Nagar Main Road, Theni 625 531
04546 – 253677
cgrftheni@tnebnet.org

**Karur EDC,**
TANGEDCO,
Karur 639 002.
04324 – 248778
cgrfkrr@tnebnet.org

**Nagapattinam EDC,**
TANGEDCO, 36 Sattayappar East Street,
Nagapattinam, 611 001
04365 – 224878
cgrfnpm@tnebnet.org

**Thanjavuri EDC,**
TANGEDCO, No.1 Vallam Road, Thanjavur 613 007
04362 – 230661
cgrftnj@tnebnet.org

**Tiruchy EDC/North**
TANGEDCO, Perambalure District.
04328 – 276060
cgrftryn@tnebnet.org

**Tiruchy EDC/ Metro,**
TANGEDCO, Mannarpuram,
Trichy 620 020
0431 – 2422216
cgrftrym@tnebnet.org

**Tiruvarur EDC,**
TANGEDCO, No. 73-C,
Durgalaya Road,
Tiruvarur 610 001.
04366 – 244099
setrvr@tnebnet.org

**Kanyakumari EDC,**
TANGEDCO, Parvathipuram,
Nagercoil, - 629 003,
Kanyakumari District.
04652 – 230160
cgrfkk@tnebnet.org

**Tirunelveli EDC,**
TANGEDCO, Maharaja Nagar, Tirunelveli 627 011
0462 – 2531981
cgrftin@tnebnet.org

**Tuticorin EDC,**
TANGEDCO, 131 & 132,
Ettaiyapuram Road,
Tuticorin - 628 001.
0461 – 2324150
cgrftuti@tnebnet.org

**Virudhunagar EDC,**
TANGEDCO, 65/1
Ramamoorthy Road,
Virudhunagar-626 001.
04562 – 244111
cgrfvdr@tnebnet.org

**பின்னிணைப்பு II**

நுகர்வோர் குறைதீர் மன்றங்களின் முகவரிகள்

**Dharmapuri EDC,**
TANGEDCO,
Dharmapuri - 636 705
04342 – 230737
cgrfdpi@tnebnet.org

**Krishnagiri EDC,**
TANGEDCO,
Dharmapuri - 636 705
04342 – 230737
sekgiri@tnebnet.org

**Kanchipuram EDC,**
TANGEDCO,
Olimohamedpet,
Kanchipuram-631 502
044 – 27277508
cgrfkcpm@tnebnet.org

**Thirupathur EDC,**
TANGEDCO, Balammal Colony, North Arcot District,
Thiruppathur 635 601.
04179 – 220243
cgrftpt@tnebnet.org

**Vellore EDC,**
TANGEDCO, Gandhi Nagar,
Vellore 632 006
0416 – 2243121
cgrfvl@tnebnet.org

**Chennai EDC/South**
TANGEDCO,110-KV SS Complex, Anna Main Road,
K.K. Nagar,
Chennai - 600 078.
044 – 24715121
cgrfchns@tnebnet.org

**Chennai EDC/West,**
TANGEDCO,
33KV Thirumangalam SS Complex, Anna Nagar,
Chennai - 600 040
044 – 26151133
cgrfchnw@tnebnet.org

**Chengalpattu EDC,**
TANGEDCO, 130,
GST Road,
Opp New Bus Stand,
Chengalpattu - 603 001
044 – 27423293
secpt@tnebnet.org

# பின்னிணைப்பு III

**<u>மின்குறை தீர்ப்பாளரிடம் முறையீடு தாக்கல் செய்வதற்கான படிவம்</u>**

**<u>(8 ஆம் ஒழுங்குமுறைவிதியைப் பார்க்க)</u>**

**இரண்டு பிரதிகள் அனுப்பப்பட வேண்டும்**

<u>அலுவலகப் பயன்பாட்டிற்காக:</u>

-----------------------------------

மேல்முறையீட்டு மனு எண். :

பெறப்பட்ட நாள் :

மின்குறை தீர்ப்பாளரின் கையொப்பம் :

| | |
|---|---|
| I மின்நுகர்வோர் பற்றிய விவரங்கள் : | |
| (அ) மின்நுகர்வோரின் பெயர் | : |
| (ஆ) அஞ்சல் முகவரி | : |
| (இ) மின்நுகர்வோரின் மின்னிணைப்பு எண். | : |
| (ஈ) மின்னிணைப்பின் முகவரி / இட அமைப்பு | : |
| (உ) மின்நுகர்வோர் வகை<br>(i) உ.அ./தா.அ.<br>(ii) வீட்டு உபயோகம் / வணிகம் / தொழில் / வேளாண் / மற்றவை | : |
| (ஊ) தொலைபேசி எண். | : |
| (எ) தொலை நகலி எண். | : |
| (ஏ) மின்அஞ்சல் (ஏதேனுமிருப்பின்) அது | : |
| II எந்த உரிமம்தாரருக்கு எதிராக முறையீடு செய்யப்படுகிறதோ அந்த உரிமம்தாரர் பற்றிய விவரங்கள் | |

| | |
|---|---|
| (அ) எதிர்மனுதாரரின் பெயர் / பதவிப் பெயர் | : |
| (ஆ) கோட்டத்தின் பெயர் மற்றும் முகவரி | : |
| (இ) உட்கோட்டத்தின் பெயர் மற்றும் முகவரி | : |
| (ஈ) பிரிவு அலுவலகத்தின் பெயர் மற்றும் முகவரி | : |
| III மின்நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் பற்றிய விவரங்கள்:– | |
| (அ) பெயர் | : |
| (ஆ) முகவரி | : |
| (இ) தொலைபேசி எண் | : |
| (ஈ) தொலை நகலி எண். | : |
| IV மின்நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்திடம் குறை சமர்ப்பிக்கப்பட்ட நாள் | : |
| V மின்நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்திடம் செய்யப்பட்ட முறையீட்டின் விவரத்தின் சுருக்கம் (விவரங்கள்–தனியாக இணைக்கப் படலாம். மின்நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்திற்கு அனுப்பப்பட்ட முறையீட்டின் நகல் இணைப்புகளுடன் சேர்த்து இணைக்கப்படுதல் வேண்டும்) | |
| VI மின்நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்திடமிருந்து மின்நுகர்வோர் இறுதி ஆணைகள் பெற்றுள்ளரா ? | : |
| (அ) ஆம் எனில், மின்நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தின் ஆணைகளின் நகல்களை இணைக்க வேண்டும். | : |
| (ஆ) இல்லையெனில், மின்நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்திடமிருந்து பதிலுரை எதுவும் பெறப்படாமல், இரண்டு மாதங்கள் கழிந்துள்ளனவா ? | : |
| VII மின்நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தினால் ஆணையிடப்பட்ட நிவாரணம் முறையீட்டில் கோரப்பட்டதற்கு எவ்வாறு நியாயமானதாக இல்லை என்பதை விளக்கவும் | : |

| | |
|---|---|
| VIII மின்குறை தீர்ப்பாளரிடமிருந்து கோரப்படும் நிவாரணம் (விவரங்கள் தனியாக இணைக்கப்படலாம்) | : |
| IX மின்குறை தீர்ப்பாளரிடம் கோரப்பட்ட நிவாரணத்திற்கு ஆதரவான கூடுதல் தகவல் /அம்சங்கள், எவையேனுமிருப்பின், அவை (ஆவணச் சான்று, எவையேனுமிருப்பின், அவற்றையும் கூட இணைக்கவும்) | |
| X மின்சார சட்டம் உரிமம்தாரர் நிபந்தனைகள் மற்றும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தினால் பிறப்பிக்கப்பட்ட, ஒழுங்குமுறைவிதிகள், விதித்தொகுப்பு, செந்தரங்கள், உத்தரவுகள் மற்றும் ஏவுரைகள், எவையெனுமிருப்பின், அவை பற்றி குறிப்பிடப்படும் குறித்தவகை சுட்டுகை எடுத்தெழுதப்பட வேண்டும். | : |
| XI தொகை எதனையும் செலுத்துமாறு மின்நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தினால் ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தால், அத்தொகையில் 25 விழுக்காடு தொகை வகுத்துரைக்கப்பட்ட முறையில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளதா (தகுதி வாய்ந்த அதிகார அமைப்பினால் வழங்கப்பட்ட ரசீதின் நகலை இணைக்கவும்) | : |
| XII ஆணைத் தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதா ? | : |
| XII அவ்வாறு செய்யப்படாதிருப்பின் காலதாமத்திற்கான காரணங்களை உரைக்கவும் | : |

**விளம்புகை**

(அ) நான்/நாங்கள் மின்நுகர்பவர்/மின்நுகர்வோர் விழுமிய முறைமையுடன் பின்வருவனவற்றை விளம்புகை செய்கிறேன் மற்றும் தனிப்பட்ட முறையில் உரைக்கிறேன் :

(i) இதில் மேலே அளிக்கப்பட்ட தகவல் உண்மையானது மற்றும் சரியானது.

(ii) இதில் மேலே உரைக்கப்பட்ட பொருண்மை எதுவும் மறைக்கப்படவில்லை அல்லது தவறாகக் கூறப்படவில்லை மற்றும் இத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் மூல ஆவணங்களின் உண்மைப்படிகளாகும்.

(ஆ) பின்வருவனவற்றில் பொருந்தாதவற்றை அடித்துவிடவும் –

(i) நான்/நாங்கள் இங்கு மேல்முறையீடு தாக்கல் செய்வதற்கு முன்பு, இந்த மேல்முறையீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள குறைகளை மன்றத்திற்கு எழுத்து வடிவிலான முறையீடாக தாக்கல் செய்துள்ளேன்/ள்ளோம்.

(ii) மன்றம் முறையீட்டினை ஏற்க மறுத்துள்ளது.

(iii) நான்/நாங்கள் முறையீட்டினை தாக்கல் செய்ததிலிருந்து 2 மாதங்களாக பதிலுரை எதனையும் பெறவில்லை.

குறிப்பு:– இது 17 ஆம் பிரிவின்படி விவரிக்கப்பட்ட பொதுத் தன்மையதான முறையீடுகளுக்கு பொருந்தக்கூடியதல்ல.

(இ) என்னிடமிருந்தோ / எங்களிடமிருந்தோ அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முறையீடுகளுடன் சேர்த்தோ அல்லது சம்பந்தப்பட்ட எவரேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினர்களிடமிருந்தோ இந்த மனுவிலுள்ள நுதல்–பொருளைக் கொண்ட முறையீடு தாக்கல் செய்யப்பட்டு, முந்தைய நடவடிக்கைகள் எவற்றிலும் மின்குறைதீர்ப்பாளரின் அலுவலகம் வாயிலாக தீர்க்கப்படவில்லை.

(ஈ) தற்போதைய முறையீட்டின் நுதல்–பொருள் எந்த ஒரு நீதிமன்ற நடவடிக்கைகளிலும் நிலுவையில் இல்லை என்றும் மற்றும் அப்பொருள் மீது தகுதிவாய்ந்த நீதிமன்றம் எதனாலும் தீர்ப்பாணை அல்லது தீர்ப்பு அல்லது இறுதி ஆணை பிறப்பிக்கப்படவில்லை என்றும் உறுதி கூறுகிறேன்.

இடம் :

நாள் :

(மேல் முறையீட்டாளர் / முறையீட்டாளர்
(மின்நுகர்வோர்/அதிகாரமளிக்கப்பட்ட
பிரதிநிதியின் பெயர்)